## இரண்டாம் ஆண்டு - மூன்றாம் பருவம்
## பாடக்குறியீட்டு எண் : 7B1A3C1
## முதன்மைப்பாடம் - தாள் - 6 சிற்றிலக்கியம்

**அலகு – 1**

### குமரகுருபரர் - மினாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ்

வருகைப் பருவம், அம்புலிப் பருவம்

பிள்ளைத்தமிழ் பற்றி தொல்காப்பியம் "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்று குறிப்பிடுகிறது. குழவி என்பது குழந்தையைக் குறிக்கும் சொல். பிள்ளைத்தமிழை பிள்ளைக்கவி, பிள்ளைப்பாட்டு, பிள்ளைத்திருநாமம் என வேறுபெயர்களால் வழங்குகின்றனர்.

குழந்தையின் மூன்றாம் மாதம் தொடங்கி இருபத்தோராம் மாதம் வரை இப்பருவங்களை அமைத்துப்பாடுவது பிள்ளைத்தமிழ் நூலின் வழக்கமாகும்.

ii) வருகைப்பருவம் இப்பருவம் குழந்தையை தம்மிடம் வருமாறு பெற்றோர்கள் அழைக்கின்ற பருவம். இது வாராணைப்பருவம் என்றும் அழைக்கப்படுகிறது. இதில் மீனாட்சியம்மையின் சிறப்புகளும், பாண்டிய நாட்டின் மகிமைகளும் எடுத்துரைக்கப்படுகின்றன.

**அம்புலிப்பருவம்:**

இப்பருவத்தில் அம்புலியாகிய வானத்து நிலவினை குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கும் பருவம் அம்புலி எனும் பருவம். இப்பருவத்தில் மீனாட்சியம்மையின் எழில், சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது. பாண்டிய மன்னன் சிறப்பு வைகையின் சிறப்பு பற்றி பேசப்படுகிறது. கள்ளழகர் பற்றிய செய்திகள், மதுரை மாநகரம் பற்றிய சிறப்புகள், மண்ணின் பெருமைகள் முதலியன எடுத்துரைக்கப்படுகிறது.

**அலகு – 2**

அபிராமி அந்தாதி – 20 பாடல்கள்

அபிராமி பட்டர் எழுதிய அபிராமி அந்தாதி 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும். அந்தாதி இலக்கியங்கள் பெரும்பாலும் பக்தியின் வெளிப்பாடாய் அமைவதாகும். இலக்கியம் அபிராமி அம்மையின் மீதுள்ள அதிகப்பற்றின் காரணமாக பாடப் பட்டதாகும் இப்பாடலில் தில்லை, சீர்காழி, திருவெண்காடு காஞ்சிபுரம், மதுரை பற்றிய திருத்தல செய்திகள் அதிகம் இடம் பெற்றுள்ளன.

**அலகு – 3**

கலிங்கத்துப்பரணி – காடுபாடியது

கலிங்கம் என்ற சொல் இன்றைய ஒரிசா நாட்டைக் குறிக்கும் சொல்லாகும் இந்நாட்டில் பாலைவனத்தின் தன்மையை ஜெயங்கொண்டார் தமது கற்பனை வளத்தினால் மேலும் செறிவூட்டியுள்ளார் எனலாம், பரணி என்பது போர்பற்றிக் குறிப்பிடும் நூல் இது 96 வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று.

பாலைவனத்தில் வளரக்கூடிய மரம், செடி, கொடிகள் அவற்றின் இயல்பு, பறவைகள், விலங்குகள், கொற்றவை தெய்வம், முதிய பேயின் செயல் என பன்முகமாக காட்சியளிக்கிறது. காடுபாடியது பகுதி.

மேலும் அதில் புராணங்கள் பற்றிய செய்திகளும், பாாலை வனத்தின் தன்மையொடு சேர்த்து சற்று கற்பனைவளமும் அழகூட்டுகிறது.

**தமிழ்விடுதூது**

தூது 96 வகை சிற்றிலக்கிங்களில் ஒன்று இந்நூல் தமிழின்பால் புலவர் கொண்டுள்ள பற்றினபகற்கிறது இத்தகைய அறிய நூலினை எழுதிய

தமிழின் பால் கொண்டுள்ள பற்றினை நூல்பெயரின் மூலம் அறியமுடிகிறது. இத்தைகைய சிறப்பினை உடைய நூலினை எழுதிய புலவரின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை எனினும் அவரின் தமிழ்ப்பற்றை, சைவ அடியார்கள் தமிழ்பாடி புனல்வாதம், அனல்வாதம் போன்றவற்றில் இருந்து சிவபெருமானின் அருளால் மீண்டுவரவும், காரணமாக இருந்தது அமிழ்தினும் உயர்ந்த தமிழே! என்றும், முதலையின் வாயில் இருந்து பிள்ளையை மீட்டெடுத்த சுந்தரின் செயல், ஆண்பனையை, பெண் பனையாக மாற்றவும் செய்யவும் காரணமாக அமைந்த தமிழே, நாவுக்கரசர் சமணர்களை வெல்லவும் காரணமாக அமைந்த தமிழே உன்மேல் உள்ள காதலால்தான் நான் வாழ்கிறேன், தேவர்கள் தரும் அமிர்தம் என்றாலும் வேண்டேன் என்று தன்காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

**அலகு – 3 கலிங்கத்துப்பரணி – காடுபாடியது**

i) கலிங்கத்துப்பரணி காடுபாடியதில் ஜெயங்கொண்டாரின் கற்பனை வளத்தினையும், பாலைநிலத்தின் இயல்பையும், பாலைவனத்தில் வாழக்கூடிய மரம், செடி, கொடி, விலங்கு, பறவைகள், இயல்பினையும் போர்நடக்கக் கூடிய
கூடிய இடமாக பாலைவனம் அமைவதையும், பேய்களின் தோற்றம், அவைகளின் செயல்கள் மற்றும் பாலைநிலத்தெய்வமான கொற்றவை பற்றியும், சூரியத் தேவன் தேவன் போன்ற தேவர்களின் புராணச் செய்திகளையும் கூறியுள்ளது. இலக்கியச்சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைவதனை காணலாம்.

ii) சிற்றிலக்கியங்களில் ஒன்றாக அமைவதுகுறவஞ்சி இது குற்றாலத்தில் அமைந்துள்ள குற்றாலநாதரை தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற நூல். திரிகூடராசப்பக்கவிராயர் ஆசிரியர் சிங்கன் சிங்கி உரையாடலில் குறிசொல்ல சென்று வந்த குறத்தியிடம் அவள் அணிந்துள்ள புதிய ஆடை மற்றும் விலை உயர்ந்த ஆபரணங்கள் எல்லாம் உனக்கு எப்படிக்கிடைத்தது அவற்றினை எல்லாம் நீ எவ்வாறு மெல்லிய உன் உடலில் தாங்குகின்றாய் என்று கேட்பதற்கு குறத்தி பல தேசங்கள் சென்று குறி சொல்லி பரிசாக பெற்றதாகவும், அவற்றையெல்லாம் அணிவதால் எனக்கு சுமையல்ல என்று பதில் கூறும் விதமாகவும் கணவன் மனைவி அன்பினைப்பற்றி பேசும் விதமாகவும் இப்பாடல் அமைகிறது.

**அலகு – 4**

**அ) முக்கூடற்பள்ளு – நாட்டுவளம்.**

பள்ளர்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் நூல் பள்ளு இலக்கியமாகும். மருத நிலத்தைச் சார்ந்து பாடப்படும் நூல், உழவுத் தொழிலாளர்களின் எளிய வாழ்க்கை முறையை அவர்கள் சூழலுடன் எடுத்தியம்பும் சிற்றிலக்கிய வகை நூலாகும். பள்ளின் இரு மனைவியரை மணந்து பள்ளன் படும் பாட்டினை (உடலினை) இந்நூல் விளக்குகிறது. இருமனைவியரின் சண்டையால் பள்ளனின் துன்பம், மற்றும் இரு மனைவியரும் பண்ணையாரிடம் சென்று முறையிடுதல் மருதத்தின் இயல்புகள் உழவுத்தொழிலின் முறைகளை சிறப்பாக இடம் பெற்றிருக்கும்.

**ஆ) குற்றாலக் குறவஞ்சி:**

சிற்றிலக்கியத்தில் 96 வகைகளுள் ஒன்றுதான் குறவஞ்சி இது குற்றாலநாதரின் மீதுள்ள பற்று, சிங்கன், சிங்கி இடையே நடக்கும் உரையாடல், சிங்கி வதாமதமாதலால் வெளியே சென்று சிங்கன் அவரிடம்

எங்கே சென்றாய் சிங்கி, நீ அணிந்துள்ள ஆபரணங்கள் எல்லாம் எப்படிக் கிடைத்தது என்று வினவுவதற்கு குறி சொல்லி பல தேசங்களில் நான் பெற்ற பரிசடா சிங்கா என்று இலக்கியச்சுவை ததும்ப பாடும் வண்ணத்தினை திரிகூடராசப்பக்கவிராயரின் புலமை பற்றினை விளக்கும் விதமாக இப்பாடல் பகுதி அமைகிறது.

**அலகு – 5 அ) குலோத்துங்கச் சோழன் உலா**

விக்கரம சோழனை அடுத்து அவன்மகன் மீது பாடப்பட்ட இரண்டாம் உலா குலோத்துங்க சோழன் உலா. இவன் இரண்டாம் குலோத்துங்கன் என வரலாற்றில் பேசப்படுகிறான் சோழமன்னர்கள் கருமைநிற மேனி உடையவர்கள் இவன் வீதியில் உலாவரும் பொழுது அவன் மேனியின் நிறத்திற்கு ஏற்ப பெண்ணொருத்தி நீலநிற ஆடையும் நிலமணியும் அணிந்து வந்தாள் என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. இவன் தில்லையில் திருமுன்றிலிருந்த திருமால் சிலையைக் கடலில் எறிந்தான். என்ற குறிப்பு இந்நூலில் குறிப்பிடப்படும் செய்தியாகும். சோழர் குலத்தோரின் சிறப்பு எடுத்துரைக்கப்படுகிறது.

**ஆ) நந்திக் கலம்பகம் -** மறவன்மகள் மறுத்துக்கூறிய 10 பாடல்கள் தெய்வத்தையோ, மக்களில் சிறந்தவர்களையோ தலைவனாக. வைத்துப்பாடுவது கலம்பகம் ஆகும். கலம்பகம் அந்தாதித் தொடையால் 100 பாடல்கள் வரை பாடப்படும். கலம்பக நூல்களுள் காலத்தால் முற்பட்டது. நந்திக்கலம்பகமாகும். தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மன் மீது பாடியது. நந்திக் கலம்பகம் பெண்கேட்டு வந்தவனை இகழ்ந்து தன்னாட்டு பெருமைகூறல்.